பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

தீபாவளி மலர் - 2013

விலை ரூ. 75/-



# தலயாத்திரைகள் ஒரு மனிதனுக்கு அவசியமா?

சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

ஆன்மிக அன்பர்கள் பலர் தன் வாழ்நாளில் இறைவனால் படைக்கப்பட்ட இந்த உலகத்தில் பல இடங்களுக்குச் சென்று வருகின்றனர். பல இடங்களுக்குச் சென்று பொன், பொருள், செல்வம், புகழ், கல்வி, போன்றவற்றைப் பெறுகின்றனர். இது போன்ற செயல்களால் நாம் இப் புவியில் பிறந்ததன் நோக்கத்தை அடைந்தோமா? என்றால் முழுவதுமாக இல்லை என்பதுதான் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு முக்கிய செய்தியாகும். அப்படியென்றால் இந்தப் புவியில் மனித உடல் எடுத்து உணர்ந்து கொண்டது யாது? என்பதுதான் அடுத்த வினா. இறைவன் இந்த பூமியில் நீக்கமற நிலம், காற்று, நீர், ஆகாயம், நெருப்பாகவும் இருக்கின்றான். அப்படியென்றால் மேற்கூறிய ஐந்திலும் இறைவன் இருக்கின்றான் என்பதை நாம் எப்படி அறிந்திட முடியும்? இவற்றை நாம் அறிவதற்காகத் தான் இறைவன் அடியார்கள் மூலம் வந்து நமக்கு உணர்த்துகின்றான். இதை எளிதாகத் தெரிவிக்க வேண்டுமென்றால், இறைவனை வணங்குவதற்கு நம் முன்னோர்கள், உருவ வழிபாடு செய்து வந்தார்கள். அந்த உருவ வழிபாட்டுத் தலங்கள் பின்பு அரியபெரிய கோயில்களாக மாறின. இந்த அரியபெரிய கோயில்களை ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் போன்ற ஞானிகள் வந்து தரிசனம் செய்து, அத்தலத்தில் எழுந்தருளிய பெருமானை வாழ்த்தி வணங்கி நமக்கு என்ன வேண்டும்? என்பதை உணர்ந்து, அந்தப் பெருமானுக்கு ஒரு சிறிய விண்ணப்பத்தை வைத்து வேதங்களும், உபநிடதங்களும், சைவ சித்தாந்தக் கருத்துகளும் உள்அடக்கிய பதிகங்களை பாடிப்அருளிச்செய்தார்கள்.

அந்தந்த தலங்களுக்கு நாம் யாத்திரை மேற்கொள்ளும்போது அத்தலத்தில் அமைதியாக அமர்ந்து ஞானிகள் பாடிய பதிகங்களை, மனம் உருகிப் பாடி, அங்கு எழுந்தருளியுள்ள மூர்த்தியை வணங்கினால் நிச்சயம் நமக்கு ஒரு நல்ல வழிகாட்டுதலை இறைவன் அருளுவான். இவ்விதமான நிகழ்வுகளை நம் பெரியவர்கள் பின்வருமாறு கூறியுள்ளனர்.

‘‘மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக தரிசித்தவர்களுக்கு வாக்குச் சொல்ல ஒரு சற்குரு வாய்க்கும் பராபரமே”

நாம் அந்த குருவின் உபதேசம்பெற்று இந்தப் புவியில் பிறந்த முழுப்பலனை அடைய முடியும். நாம் முழுப்பலன் அடைவதற்காக சைவசமயத்திற்குத் தன்னையே அர்ப்பணித்த ஞானியர் பலர் இருந்தாலும், இந்த நூற்றாண்டில் வாழ்ந்து, மீண்டும் பிறவா நிலையை அடைந்தவர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் ஆவர். இவருக்கு முருகப்பெருமான் எவ்வாறெல்லாம் அருள்புரிந்தான் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு சுவாமிகள் மேற்கொண்ட தலயாத்திரைகளின் பெருமைகளை நாம் உணர்ந்து கொள்வோமா?



தகராலய வித்தைக்கு வித்திடும் ஒரு மொழியை உபதேசமாகப் பெற்றுக்கொண்டு, சிவப்பண்பும் தவப்பண்பும் மிக்கவராய்த் தமது ஊருக்குத் திரும்பிவந்த சுவாமிகள் ஏறக்குறையப் பதினைந்து மாதங்கள் வரையிலும் பாம்பன் பதியிலேயே இருந்தார். பெருமான் ஈந்த ஒரு மொழியைப் பற்றிய ஆழ்ந்த, தொடர்ந்த சிந்தையிலேயே இருந்ததால் சுவாமிகள் பாடலும் இன்றி, அதிகமாக உரையாடுதலும் இன்றி இருந்தார். சுவாமிகளைப் பற்றிய செய்தியைக் கேள்விப்பட்ட அன்பர்களும் பொதுமக்களும் அவர் இருக்குமிடத்திற்கு வந்து வந்தித்து ஆசிபெற்றுச் சென்றனர்.

ஒருநாள், முகம்மதிய கனவான்கள் இருவர் சுவாமிகளைக் காண வந்தனர். அவர்களும் பாம்பன் பதியில் வாழ்பவர்களே. சுவாமிகளை வணங்கிவிட்டுத், தாங்கள் ஓர் அற்புத நிகழ்ச்சியைக் கண்கூடாகக் கண்டதாகத் தெரிவித்தார்கள். ஆண்டவனின் படைப்பில் காணப்படும் அரிய பெரிய மகத்துவ நிலைகளை உணர்ந்து கொள்வதற்கும் உணர்த்துவதற்கும் அவர்கள் விவரித்த நிகழ்ச்சி பிரத்தியட்சப்பிரமாணமாக விளங்கியது.

ஒருநாள் விடிந்து 2 மணி நேரம் ஆனபிறகு முகம்மதியர் இருவரும், தாழம்புதர்கள் செறிந்துள்ள ஓர் இடத்தே - படம் எடுத்து விரித்துள்ள பெரிய பாம்பு ஒன்றும் பருத்த உடல்வாய்ந்த கீரியும் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டனர். வெற்றி எதன்பக்கம் என்பதைக் காண்பதற்காக அவர்கள் அங்கேயே நின்றனர். சண்டையின் முடிவில் கீரி பின்டைந்து விரைந்து ஓட, பாம்பு பார்த்துக் கொண்டே இருந்தது. சென்ற கீரி மீண்டும் வந்தாலும் வரும் என எண்ணியதால் அவர்கள் அவ்விடத்தை விட்டு நீங்காமல் இருந்தனர். சிறிது நேரம் சென்றதும், அவர்கள் எதிர்பார்த்தது போலவே அந்தக் கீரி ஒரு பெரிய கீரிக் கூட்டத்துடன் அவ்விடத்திற்கு மீண்டும் வந்தது. அந்தக் கீரிக் கூட்டத்தின் நடுவில் ஒரு பெரிய கீரியின் பிடரிமேல் ஒரு சிறிய வெண்ணிறக் கீரி கம்பீரமாக அமர்ந்து கொண்ட தன் தலையைச் சற்றே உயர்த்தி நோக்கியபோது, அந்த வெண்கீரியின் விழிகள் பளபள எனப் பிரகாசமாக ஜொலித்து விளங்குவதை அவ்விருவரும் கண்டனர். சுமார் மூன்று வில் அளவு ஏறக்குறைய 30 அடி தூரத்தில் நின்று அந்த வெண்கீரி தனது விழிகளை விரித்து நோக்கிய அளவிலேயே படம்விரித்திருந்த அந்தப்பாம்பு, படத்துடன் தரையின் மேல் சுருண்டு வீழ்ந்தது. அது வீழ்ந்ததைக் கண்ட கீரிக்கூட்டம் வந்த வழியே சென்றுவிட்டது.

பிறகு அவ்விருவரும் பாம்பு வீழ்ந்து கிடந்த இடத்திற்கு வந்து ஒரு சிறிய கோலால் அதனைத் தட்டினார்கள். பாம்பின் உடம்பு அடியோடு வலிகுன்றிக் குழைசேறு போன்று ஆகியிருந்ததைக் கண்டனர். "என்ன ஆச்சரியம்! அந்த வெண்ணிற ராஜகீரியின் பார்வை இவ்வளவு மகிமை வாய்ந்த செயலைச் செய்வதாயிற்றே" என இறும்பூது அடைந்து, கடவுளின் சிருட்டி மகிமையைப் புகழ்ந்துகொண்டே, தாம் சேரவேண்டிய இடத்துக்குச் சென்றனர். மீண்டும் பாம்பனுக்கு வந்ததும் அந்த அற்புத நிகழ்ச்சியைச் சுவாமிகளுக்குத் தெரியப்படுத்தி நின்றனர்.

இந்த நிகழ்ச்சியை உதாரணம் காட்டியே, சுவாமிகள், திட்பம் எனும் உரையில் பின்வருமாறு கூறினார். "இவ்வாற்றால் மனுடரை ஆளும் அரசரும் உண்மையாகவே அமைக்கப்பட்ட தலைவர் ஆவார் என்பதும், தேவர் தலைவனாயுள்ள சிவபிரானது நெற்றிவிழிப் பார்வை பட்ட துணையே காமதேவன் கனற்றப்பட்டனன் (சுட்டெரிக்கப்பட்டான்) என்பதும் சிவயோக ஞானவிழி செவ்வனே படப் பாவம் பாறும் (நீங்கும்) என்பதும் உறுதியாதல் காண்க.



ஞாலமாக்களை எல்லாம் நம் சொல்லின்படி வயப்படுத்திக் கொள்ளலாம். நாம் ஓர் அரசனும் ஆகலாம் எனப் பேராசையின் மூத்து முயல்வர் கொள்கை முற்றுப்பெறா நிலைக்களத்தே சகதீசசக்தி நிற்கின்றது என்பதூஉம் இக்கிரி சருப்ப நியாயத்தால் உணரக்கிடக்கின்றதும் ஓர்க"

மன்மத ஆண்டு ஆடி மாதத்தில் சுவாமிகள் மீண்டும் தலயாத்திரையைத் தொடங்கினார். பாம்பன் காளிமுத்துப் பிள்ளை எனும் அன்பர் உடன் சென்றார். முதலில் திருக்குன்றக்குடிக்குச் சென்று குமார பகவானைத் தரிசனம் செய்து கொண்டு பதிகம் ஒன்று பாடினார்.

"பாட்டின் உனைப்புகழ்ந்தே மண்பாட்டை ஒழித்துள்ள அன்பர்
நாட்டில் இருக்கினும் காட்டை நண்ணி இருக்கினும் அன்றே
கேட்டதெல்லாம் அளித்து என்றும் கேடில் அரும்பொருள் தன்னைக்
கூட்டிக் கொடுத்திடும் கோவே குன்றக் குடியுறை தேவே"

என்றெல்லாம் இனிமையாகப் பாடி இறைவனுக்கு அளித்தார்.

இதன்பிறகு திருப்புத்தூர், திருக்கானப் பேரூர் முதலான தலங்களுக்குச் சென்றார். பின்னர், தூத்துக்குடிக்குச் சென்று திருவனந்தபுரத்து சுப்பிரமணியப்பிள்ளையின் இல்லத்தில் தங்கி இருந்து திருநெல்வேலியில் உள்ள சிக்க நரசையன் என்னும் சிற்றூரில் தங்கினார். தாமிரபரணி ஆற்றின் நடுவே அரிதாக அமைந்துள்ள திருவுருமலையில் திருக்கோயில் கொண்டுள்ள குமாரபகவானைத் தரிசித்துப் பேறுபெற்றார். திருவுருமலை முருகப்பெருமான் பேரில் பதிகமும் பாடி அருளினார்.

எங்கணும் அருள்சால் நெறிசிறந் திடுமாறு
இறைவனும் சீட பாவம்தான்
அங்கமாக் கொளும்கால் அவற்குமோர் குருவென்
றாயினை; அகத்தியன் முதல்நல்
புங்கவர் பலர்க்கும் அருளினை இதுநாள்
புரையுடை நான்கடைத் தேறச்
சங்க்ரகித் துரைத்தாய் திருவுரு மலைவாழ்
சண்முகப் பெரும்பரம் பொருளே.....

அதே ஆடிமாதம் 28ஆம் நாள் திருநெல்வேலியிலிருக்கும் நெல்லையப்பர் கோயிலில் இருக்கும் சண்முகப் பெருமானின் திருக்கோயில் பொலிவு குறைந்து தோன்றுவதைக் கண்டு மிகவும் உளம் வருந்தினார். "பெருமானின் திருக்கோயில் சான்னித்தியம் கொண்டு மங்காப் பொலிவும்

## அஷ்ட சரஸ்வதி

1. வாகீஸ்வரி
2. சித்ரேஸ்வரி
3. துளஜா
4. கீர்த்தீஸ்வரி
5. அந்தரிட்ச சரஸ்வதி
6. கட சரஸ்வதி
7. நீல சரஸ்வதி
8. கினி சரஸ்வதி

மகிமையும் வாய்ந்ததாகத் திகழ வேண்டுமே" என உளமார எண்ணியவராய் "எனது உள்ளத்தைப் பூர்த்தி செய்" என்னும் கருத்துத் தோன்ற "சீருடை ஆரியனே" எனத் தொடங்கும் சீரிய பதிகத்தை அருளினார்.

**"சீருடை ஆரியனே எனைச் சேர அணைப்பவனே**
**ஏருடை வானவர்கள் நிதம் ஏத்தும் பராபரனே**
**ஆருடை வேலவனே நெல்லை அப்பர் விமானம் உறை**
**நாருடை ஓம்மயனே என்றன் நாட்டத்தைப் பூர்த்திசெய்யே**

**ஏத்தி இறைஞ்சுபவர் மிகை ஏக அருள்பவனே**
**கோத்திரம் அற்றவனே குணக் கூறினனை கூறவொண்ணா**
**ஆத்தும நாயகனே நெல்லை அப்பர் விமானம் உறை**
**ஊத்தையில் சேயவனே எனது உள்ளத்தைப் பூர்த்தி செய்யே"**

(அடுத்த ஆண்டிற்குள் சுவாமிகள் விரும்பியவாறே அந்தக் கோயில் செம்மையாகத் திருப்பணி செய்யப்பெற்று செழுமையும் தெய்வப் பொலிவும் கொண்டு விளங்கியது).

அங்கிருந்து மீண்டும் சிக்க நரசையன் கிராமத்திற்கு வந்து அங்கிருந்தவாறே திருச்சிந்துபுரம் பதிகத்தைப் பாடித் திருச்செந்தூர் முருகப் பெருமானுக்கு அர்ப்பணித்தார். பின்னர் அங்கிருந்து திருவாலவாய் எனப்படும் மதுரைத் தலத்துக்கு வந்து தெய்வ தரிசனம் செய்தார். தரிசனம் செய்த காலம் புரட்டாசி மாதம் 2ஆம் நாள்; அப்போது,

**"பொன்னைப் பூமியைப் புன்புல ஆக்கையை**
**மின்னை நாடி உழன்றுள்ள வீணனேன்**
**தன்னை ஆண்டவொர் தன்மை என், ஆலவாய்**
**அன்னையே அருளே குகப் பிரமமே"**

எனத் தொடங்கும் பதிகம் பாடினார்.

திருத்தல தரிசன காலங்களுக்கு இடையே, தனியே இருக்கும்போது சுவாமிகள் பாடி அருளிய பொதுப் பதிகங்கள் பலவாகும்.

ஐக்கியமன்றாட்டு, அங்கப்பேறு, உள்வைப்பு, மெய்ம்மார்க்க விளக்கம், சுப்பிரமணிய ரகசியம், நமன்தமர் நணுகாநெறி, வழிபாட்டின் மாட்சி, தாசப்பிரகாசம், திருக்கருணைப் பிணக்கம், மிகைவெல் வயவை, மெய்ப்போதகம் எனும் பதிகங்கள் மதுரைக்கு வருவதற்கு முன்னால் பாடப்பட்டவையாகும். மதுரையில் தங்கி இருந்த போது "சீருளார் ஏத்தும் சீருடை நம் சிவபெருமான்" எனத் தொடங்கும் திருக்கன்னி நாடு எனும் பதிகம் சுவாமிகளால் பாடப்பட்டது.

மதுரையிலிருந்த புறப்பட்டுத் திருக்கொடுமளூர் எனும் தலத்துக்கு வந்து தரிசனம் செய்து பதிகம் பாடினார். இத்தலத்தைத் தரிசிக்கும்போது உடன் இருந்தவர் அறம்வளர்த்தநாதப் பிள்ளை என்னும் அன்பராவர். உப்பள ஆய்வாளராகப் பணியாற்றியவர் அவர். திருப்போற்றி என்னும் பொதுப் பதிகத்தையும் சுவாமிகள் பாடினார். திருக்கொடுமளூரிலிருந்து புறப்பட்டுப் பிரப்பன் வலசையாகிய தபோ பூமிக்கு மீண்டும் வந்தார்.

**"பூமகள் இயங்கும் உலகில் நல்ல தமிழ் நாவலர் புலம்பு கவிதைத்**
**தாமம் அணி நம்கடவுள் என்னும் முருகையர் அடிதன்னை எணியே**
**நாம் முனம் இருந்த வளமேகிளர் நயப்புள பிரப்பன் வலசை**
**ஆம் இதனை நண்ணுபவர் அன்புடைய ராவர் பழி அஞ்சும் மனதே"**

எனத் தொடங்கும் பிரப்பன்வலசைத் திருப்பதிகத்தை அருளினார். இது நிகழ்ந்த காலம் மன்மத வருடம் புரட்டாசி மாதம் 24ஆம் நாள் ஆகும். பிரப்பன் வலசைத் தலத்திலிருந்து புறப்பட்டு சுவாமிகள் மீண்டும் பாம்பன் பதிக்கு வந்து சேர்ந்தார்கள்.

இக்கட்டுரையின் முக்கிய நோக்கம் ஆன்மிக அன்பர்கள் தலயாத்திரை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும், அத்தலங்களுக்கு செல்லும்போது அத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் மீது அருளாளர்கள் பாடி அருளிய பதிகங்களை கண்களில் நீர் கசிய, உள்ளம் உருகி வாய்விட்டுப் பாடி பரமனைப் பரவசம் ஆக்க வேண்டும். சுவாமிகள் அவ்வாறு உருகிப் பாடிய பதிகங்களை மெய்யன்பர்கள் www.pambanswamigal.net (English) www.pambanswamigal.org (Tamil) பார்த்து தெரிந்து பயனடைய வேண்டும் என்ற ஒரு சீரிய நோக்கத்துடன் வெளியிட்டுள்ளோம். ஆகையால் நாம் பதிகம் பாடுவோம். முழுப் பயன் பெறுவோம்.

## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**